செ.வெ.எண்.529/2017 நாள்: 08.11.2017

# கார்த்திகை மகா தீப திருவிழா 2017

## துணிப்பை, சணல்பை மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த தூக்கு பைகளை கொண்டு வரும் பொது மக்களுக்கு அதிர்ஷ்ட முறையில் தங்கம் மற்றும் வெள்ளி நாணயங்கள் பரிசு.

திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஷ்வரர் திருக்கோவிலில் நடைபெறும் கார்த்திகை மகா தீப திருவிழா ஒவ்வொரு வருடமும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகின்றது. இவ்வருடம் 02.12.2017 (சனிக்கிழமை) அன்று கார்த்திகை மகா தீப திருவிழா திருவண்ணாமலையில் நடைபெற உள்ளது.

இத்திருவிழாவிற்று வரும் பக்தர்கள், தங்களது பூஜை சாமான்களை கொண்டு செல்லவும், பிற திண்பண்டங்கள், விளையாட்டு சாமான்களை தங்களது இடங்களுக்கு எடுத்து செல்லவும், பிளாஸ்டிக் கேரிபைகளை பயன்படுத்துவது பொதுவான நடைமுறையில் உள்ளது. அவ்வாறு பயன்படுத்தப்படும் பெரும்பாலான பிளாஸ்டிக் கேரிபைகள், கொண்டு செல்லும் வழியிலேயே கிழிந்து குப்பையாக மாறி கிரிவலப்பாதையிலும், திருவண்ணாமலையில் பிற இடங்களிலும் வீசப்பட்டு வருகின்றன.

இவ்வாறு உருவாகும் பிளாஸ்டிக் குப்பைகளை தவிர்க்கவும், பொதுமக்கள் பிளாஸ்டிக் கேரிபைகளுக்கு மாற்றாக துணிப்பை, சணல்பை மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த பிற தூக்கு பைகளை வரும் கார்த்திகை மகா தீப திருவிழாவின் போது பயன்படுத்த ஊக்குவிக்கவும் திருவண்ணாமலை மாவட்ட நிர்வாகமும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியமும் திட்டமிட்டு உள்ளன.

இதன்படி, கார்த்திகை மகா தீப திருவிழாவிற்கு துணிப்பை, சணல்பை மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த பிற தூக்கு பைகளை எடுத்துவரும் பொதுமக்களுக்கு, அதிர்ஷ்ட முறையில் தங்கம் மற்றும் வெள்ளி நாணயங்கள் வழங்கப்பட உள்ளன. திண்டிவனம் சாலை கிரேஸ் மருத்துவமனை வாயில், குபேரலிங்கம் மற்றும் வேலூர் பிரிவு சாலை அண்ணா வளைவு என மூன்று இடங்களில் அமைக்கப்பட உள்ள சிறப்பு பிளாஸ்டிக் தவிர்ப்பு மையங்களில், பொதுமக்கள் தாங்கள் கொண்டு வரும் ஒவ்வொரு துணிப்பை, சணல்பை மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த தூக்கு பைகளை காண்பித்து, அதில் சீக்கிரம் அழியாத மையினால் ‘1’ என குறியிடப்பட்ட பின்பு, வரிசை எண்ணுடன் கூடிய சீட்டினை பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு 3 இடங்களிலும், ஒவ்வொரு மணி நேரத்திற்கும் வழங்கப்படும் சீட்டுகளை சேர்த்து, கணினி முறையில் அதிர்ஷ்ட நபர் தெரிவு செய்யப்பட்டு, 10 கிராம் வெள்ளி நாணயம் பரிசாக வழங்கப்படும். மேலும், 3 இடங்களிலும் ஒவ்வொரு 8 மணி நேரத்திற்கும் வழங்கப்படும் சீட்டுகளை சேர்த்து, ஒரு சிறப்பு அதிர்ஷ்ட நபர் தெரிவு செய்யப்பட்டு, 2 கிராம் தங்க நாணயம் பரிசாக வழங்கப்படும்.

அவ்வாறு தேர்வு செய்யப்படும் நபரின் சீட்டுக்குரிய வரிசை எண், கோவில் மற்றும் கிரிவலப் பாதையில் உள்ள காவல்துறை ஒலி பெருக்கி மூலம் அறிவிக்கப்படும். தேர்வு செய்யப்படும் பொதுமக்கள், திருவண்ணாமலை பேருந்து நிலையத்திற்குள் அமைந்துள்ள திருவண்ணாமலை நகராட்சியின் பொது சுகாதார பிரிவு அலுவலகத்தில் நிறுவப்பட்டுள்ள சிறப்பு பரிசு வழங்கும் மையத்தில், தங்களிடமுள்ள அதிர்ஷ்ட சீட்டினை ஒப்படைத்து உரிய அடையாள சான்றினை காண்பித்து தங்களுக்குரிய தங்கம் அல்லது வெள்ளி நாணயத்தினை பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது.

கார்த்திகை மகா தீப திருவிழா நடைபெற உள்ள 02.12.2017 (சனிக்கிழமை) அன்று காலை 06.00 மணிக்கு துவங்கப்படும் இத்திட்டத்தில், மறுநாள் 03.12.2017 (ஞாயிற்றுக்கிழமை) காலை 06.00 மணி வரை தொடர்ச்சியாக 24 மணி நேரத்திற்கு அதிர்ஷ்ட சீட்டுகள் வழங்கப்படும். இத்திட்டத்தில் மொத்தம் தலா 10 கிராம் எடையுள்ள 24 வெள்ளி நாணயங்களும், தலா 2 கிராம் எடையுள்ள 3 தங்க நாணயங்களும் வழங்கப்படும்.

இத்திட்டம் குறித்தான விழிப்புணர்வினை ஏற்படுத்த 1500 பசை ஒட்டிகள்(ளுவைஉைமநச) தயாரிக்கப்பட்டு அவை பொதுமக்கள் பயன்படுத்தும் பேருந்துகள், சிற்றுந்துகள், அரசு அலுவலகங்கள் மற்றும் வாடகை வாகனங்களில் ஒட்டப்பட உள்ளன.

தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் கார்த்திகை மகா தீப திருவிழாவிற்கு வரும் பொதுமக்கள், தங்களது துணிப்பை, சணல்பை மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த தூக்கு பையுடன் வருகை புரிந்து இத்திட்டத்தில் பங்கு கொள்ளுமாறும், திருவண்ணாமலையின் சுற்றுச்சூழலை தொடர்ந்து பாதுகாக்க முழுமையான ஆதரவு தருமாறும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.எஸ்.கந்தசாமி இ.ஆ.ப., அவர்களால் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், மாவட்ட ஆட்சியரகம், திருவண்ணாமலை.**